2nd Term Mock Test

6th Standard

Date : 11-Jan-19

Time : 02:30:00 Hrs

Reg.No. : | | | | | | |

Total Marks : 60

## பகுதி-அ

10 x 1 = 10

### I .சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :

1) இரட்டை எண்களில் ஒரே பகா எண்

(a) 4 (b) 6 (c) 2 (d) 0

2) 27 என்ற எண்ணின் காரணிகளின் கூடுதல்.

(a) 28 (b) 37 (c) 40 (d) 31

3) ஓர எண்ணின் காரணிகள் 1, 2, 4, 5, 8, 10, 16, 20, 40 மற்றும் 80 ஆகும் எனில் அந்த எண் என்ன?

(a) 80 (b) 100 (c) 128 (d) 160

4) பின்வரும் இணைகளில், எவை சார்பகா எண்கள் ஆகும்?

(a) 51, 63 (b) 52, 91 (c) 71, 81 (d) 81, 99

5) 9 மீ 4 செ.மீ-க்குச் சமமானது

(a) 94 செ.மீ (b) 904 செ.மீ (c) 9.4 செ.மீ (d) 0.94 செ.மீ

6) 1006 கிராமுக்குச் சமமானது

(a) 1 கி.கி 6 கி (b) 10 கி.கி 6 கி (c) 100 கி.கி 6 கி (d) 1 கி.கி 600 கி

7) 22 : 35 மணியில் இருந்து 5 மணி நேரம் கடந்த பிறகு காட்டும் நேரம் _____

(a) 2: 30 மணி (b) 3: 35 மணி (c) 4: 35 மணி (d) 5: 35 மணி

8) தள்ளுபடியானது ____________ லிருந்து கழிக்கப்பட்டு விற்பனை விலை பெறப்படுகிறது.

(a) குறித்த விலை (b) அடக்க விலை (c) நட்டம் (d) இலாபம்

9) ஒரு முக்கோணத்தின் இரு பக்கங்கள் 5 செ.மீ மற்றும் 9 செ.மீ எனில் மூன்றாவது பக்கம் __________ ஆகும்.

(a) 5 செ.மீ (b) 3 செ.மீ (c) 4 செ.மீ (d) 14 செ.மீ

10) பின்வருவனவற்றில் பொருத்தமில்லாதது எது?

(a) இருசமபக்க விரிகோண முக்கோணம் (b) இருசமபக்கக் குறுங்கோண முக்கோணம்

(c) சமபக்க விரிகோண முக்கோணம் (d) சமபக்கக் குறுங்கோண முக்கோணம்

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

5 x 1 = 5

11) 11 மற்றும் 60 ஆகிய எண்களுக்கு இடையே உள்ள பகா எண்களின் எண்ணிக்கை______ஆகும்.

12) 3753 என்ற எண்ணானது 9 ஆல் வகுபடும். ஆகையால் அவ்வெண் _____ஆல் வகுபடும்.

13) 26, 39 மற்றும் 52 ஆகிய எண்களின் மீ.சி.ம _____ ஆகும்

14) 20 லி - 1 லி 500 மி.லி =______ லி ______ மி.லி

15) இரு சமபக்க முக்கோணத்தில்___________ கோணங்கள் சமம்.

### III பொருத்துக

5 x 1 = 5

16) 04.15 — (1) 4 மணி கடந்து 15 நிமிடங்கள்

17) 07.45 — (2) 8 மணிக்கு 15 நிமிடங்கள்

18) 02.20 — (3) அசமபக்க முக்கோணம்

(4) இரு சமபக்க முக்கோணம்

19) அனைத்துப் பக்கங்களும் வெவ்வேறானவை.

20) எவையேனும் இரு பக்கங்கள் சமம் (5) 2 மணி கடந்து 20 நிமிடங்கள்

## பகுதி-ஆ

10 x 2 = 20

### ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி :

21) எவையேனும் மூன்று ஒற்றை இயல் எண்களின் கூடுதலானது ஓர் ஒற்றை எண்ணாகும். இந்தக் கூற்றை ஓர் எடுத்துக்காட்டுடன் உறுதிப்படுத்துக்க.

22) ஒவ்வோர் எண்ணையும் காரணிச்செடி முறை மற்றும் வகுத்தல் முறை மூலம் பகாக் காரணிப்படுத்துக.

(i) 60

(ii) 128

(iii) 144

(iv) 198

(v) 420

(vi) 999

23) கீழக்காணும் எண்களுக்குப் பகாக் காரணிப்படுத்துதல் முறையில் மீ.பெ.கா காண்க.

(i) 18,24

(ii) 51,85

(iii) 61,76

(iv) 84,120

(v) 27,45,81

(vi) 45,55,95

24) கீழக்காணும் எண்களுக்குப் பகாக் காரணிப்படுத்துதல் முறையில் மீ.சி.ம-வைக் காண்க.

(i) 6,9

(ii) 8,12

(iii) 10,15

(iv) 14,42

(v) 30,40,60

(vi) 15,25,75

25) பின்வரும் கூற்றுகளைக் காரணத்தோடு விளக்குக.
ஓர் எண் 3 ஆல் வகுபடும் எனில், அவ்வெண் 9 ஆல் வகுபடும்.

26) ஒரு முட்டையில் 81 கி.கி.சர்க்கரை உள்ளது. கடைக்காரர் இதனை 750 கி எடையில் சிறிய பைகளில் நிரப்புகிறார் எனில், 81 கிலோ கிராம் சர்க்கரையை எத்தனை சிறிய பைகளில் நிரப்பலாம்?

27) 12 மணி 18 நிமிடங்கள் 40 வினாடிகளில் இருந்து 10 மணி 20 நிமிடங்கள் 35 வினாடிகளைக் கழிக்க.

28) கீழ்கண்டவற்றைக் 12 மணி நேர அமைப்புக்கு மாற்றுக

(i) 02 : 00 மணி

(ii) 08 : 45 மணி

(iii) 21 : 10 மணி

(iv) 11 : 20 மணி

(v) 00 : 00 மணி

29) பிப்ரவரி 2020 இக்கான மாத அட்டவணையை உருவாக்குக (குறிப்பு : 2020ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் புதன் கிழமை)

30) ஓர் அஞ்சல் அலுவலகம் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை இயங்குகிறது. மதியம் 1 மணி நேரம் உணவு இடைவேளை ஆகும்.அஞ்சல் அலுவலகம் வாரத்தில் 6 நாட்கள் இயங்கினால், ஒரு வாரத்தின் மொத்த வேலை நேரத்தைக் கணக்கீடுக.

31) ஒரு விற்பனையாளர் மூன்று பொருட்களை ரூ.325, ரூ.450 மற்றும் ரூ.510 என வாங்கினார். அவற்றை முறையே ரூ.350, ரூ.425 மற்றும் ரூ.525 என விற்பனை செய்தார். அவருடைய மொத்த இலாபம் அல்லது நட்டம் காண்க.

32) நாதன் ஒரு கிராமத்து விற்பனையாளரிடமிருந்து ரூ.800க்கு 10 குடுவைகள் தேன் வாங்கினார்.அவற்றை ஒரு நகரத்தில் ஒரு குடுவை ரூ.100 வீதம் விற்பனை செய்தார். அவருடைய இலாபம் அல்லது நட்டம் காண்க.

33) ஒருவர் 400 மீட்டர் நீளமுள்ள துணியை ரூ.60,000க்கு வோங்கி, ஒரு மீட்டர் ரூ.400 வீதம் விற்பனை செய்தார் எனில் அவருடைய இலாபம் அல்லது நட்டம் காண்க.

34) இருசமபக்க முக்கோணத்தின் ஒரு கோணம் $124^{\circ}$ எனில் மற்ற இரு கோணங்களைக் கண்டுபிடி.

35) ஓர் இருசமபக்க முக்கோணத்தின் ஒரு கோணம் $70^{\circ}$ எனில் மற்ற இரு கோணங்கள் அளவுகள் என்னென்னவாக இருக்கலாம்?

## பகுதி-இ 5 x 3 = 15

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி :

36) எவையேனும் இரு அடுத்தடுத்த ஒற்றை எண்களின் கூடுதலானது 4 ஆல் வகுபடும். இந்தக் கூற்றை ஓர் எடுத்துக்காட்டுடன் மெய்ப்பிக்க.

37) 1 மீ 20 செ.மீ, 3 மீ 60 செ.மீ மற்றும் 4 மீ அளவுகளைக் கொண்ட கயிறுகளின் நிலங்களைச் சரியாக அளக்கப் பயன்படும் கயிற்றின் அதிகபட்ச நீளம் என்ன?

38) கீதா 2 லி 250 மி.லி கொள்ளவு கொண்ட தண்ணீர்க் குடுவையைக் கொண்டு வந்தாள். அதிலிருந்து அவளுடைய நண்பர்கள் 300 மி.லி தண்ணீர் குடித்து விட்டனர். குடுவையில் உள்ள மீதித் தண்ணீரின் அளவு எவ்வளவு?

39) 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் தேதி புதன்கிழமை எனில் 2018ஆம் ஆண்டு சூன் மாதம் 8ஆம் தேதி என்ன கிழமை?

40) ஒரு மேசையானது ரூ.4500 க்கு வாங்கப்பட்டு ரூ.4800 க்கு விற்கப்படுகிறது எனில் இலாபம் அல்லது நட்டம் காண்க.



41) 7.8 செ.மீ அளவில் ஒரு கோட்டுத்துண்டு வரைக. கோட்டுத்துண்டிற்கு மேலே 5 செ.மீ தூரத்தில் B என்ற புள்ளியைக் குறிக்க. B வழியே கோட்டுத்துண்டிற்கு இணைகொடு வரைக.

42) வாணி, கலா மற்றும் அவர்களுடைய மூன்று தோழிகள் மோர் கடைக்குச் சென்றனர். மேலும் 9 தோழிகள் அவர்களுடன் இணைந்து மோர் குடித்தனர். ஒரு குவளை மோரின் விலை Rs.6 எனில் வாணி எவ்வளவு தொகை கொடுத்திருப்பாள்? வாணி Rs.84 கொடுக்க வேண்டும் என்கிறாள். ஆனால் கலா Rs.59 கொடுக்க வேண்டும் எனக் கூறுகிறாள். இதில் யார் கூறியது சரி?

43) 3a+b ஐ மரவுரு வரைபடமாக மாற்றுக.

## பகுதி-ஈ 1 x 5 =5

ஏதேனும் ஒன்றினுக்கு விரிவான விடையளி :

44) பின்வரும் கோண அளவுகளைக் கொண்டு முக்கோணம் அமைக்க இயலுமா? ஆம் எனில், அம்முக்கோணத்தின் வகையைக் குறிப்பிடுக.

(i) 60°, 60°, 60°

(ii) 90°, 55°, 35°

(iii) 60°, 40°, 42°

(iv) 60°, 90°, 90°

(v) 70°, 60°, 50°

(vi) 100°, 50°, 30°

45) கொடுக்கப்பட்டுள்ள கோட்டிற்கு மேலே உள்ள ஒரு புள்ளி வழியே அக்கோட்டிற்குச் செங்குத்துக்கோடு வரைக.

****************************************